வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 01.06.2024 சனிக்கிழமை இதழ் : 153 பக்கங்கள் : 12

## திருக்கோணேச்சரத்தை பாதுகாத்திடுங்கள்

# கிழக்கு ஆளுநர் செந்திலிடம் ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 01

**சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த சைவத் தமிழர்களின் தலையாய கோவிலான திருக்கோணேச்சரத்தை பாதுகாப்பதற்கு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன்.**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை ஆறு. திருமுருகன் விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, திருக்கோணேச்சரத்துக்கு செல்லும் பாதையில் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அந்த இடத்தில் இருந்து நீக்கி அவர்களுக்கு மாற்று ஒழுங்கு செய்யவேண்டும். ஆலயத்துக்கு செல்லும் பக்தர்களின் புனித வழிபாட்டுக்கு உரிய சூழ்நிலையை

11

## பெற்றோல், ம. எண்ணெய் லீற்றருக்கு ரூ.13 குறைந்தது



கொழும்பு, ஜூன் 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சில எரிபொருட்களின் விலைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறைத்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை லீற்றருக்கு 13 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 355 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஒட்டோ டீசலின் விலை லீற்றருக்கு 16 ரூபாய் குறைக்கப்பட்டு 317 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 13 ரூபாய் குறைக்கப்பட்டு 202 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனினும், 95 ஒக்ரைன் ரக பெற்றோல் லீற்றர் 420 ரூபாயாகவும் சுப்பர் டீசல் லீற்றர் 377 ரூபாயாகவும் மாற்றமின்றி காணப்படுகின்றன. (ஐ)

# எதிராளிகள் ஒரு நிலைப்பாட்டில் பதில் மனுக்களை தாக்கல் செய்வர்

## நீதிமன்றில் தமிழ் அரசினர் தெரிவிப்பு

- வழக்கும் ஜூன் 19இற்கு ஒத்திவைப்பு

திருமலை, ஜூன் 01

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கை விரைவாக நிறைவுறுத்த வசதியாக எதிராளிகள் அனைவரும் ஒரு நிலைப்பாட்டில் பதில் மனுக்களை தாக்கல் செய்வர் என்று நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு வசதியாக கால அவகாசம் வழங்கி வழக்கை ஜூலை 19ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

அத்துடன், கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு, பதவியேற்பு தொடர்பில் திருகோணமலை நீதிமன்றம் ஏற்கனவே விதித்திருந்த கட்டாணை உத்தரவு ஜூலை19 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமை மற்றும் நிர்வாகத் தெரிவுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

நேற்றைய

11

உயர்தர பரீட்சை பெறுபேறு

# யாழ். இந்துவில் 56, வேம்படியில் 30 ஹாட்லியில் 21 பேருக்கு 3ஏ சித்தி!

யாழ்ப்பாணம், ஜூன் 01

நேற்று வெளியான க. பொ. த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 56 மாணவர்களும், வேம்படி மகளிர் கல்லூரியில் 30 மாணவிகளும் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் 21 மாணவர்களும் 3ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சை கடந்த ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடை பெற்றது. இந்தப் பரீட் சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகள் சில பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் விவரங்கள் வருமாறு,

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 56 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்றனர். இதில் பௌதிக விஞ்ஞான (கணிதம்) பிரிவில் 26 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 23 மாணவர்களும் கலைப் பிரிவில் 5 மாணவர்களும் வணிகவியல் பிரிவில் 2 மாணவர்களும்

11

## மின்சார கட்டண குறைப்பு ஜூலையில் சாத்தியமாகலாம்!

கொழும்பு, ஜூன் 01

இலங்கை மின்சார சபை கோரிய கால அவகாசத்துக்குள் மின்சார கட்டண குறைப்பு யோசனையை தந்தால் ஜூலை நடுப்பகுதிக்குள் கட்டணத்தை குறைக்க முடியும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான யோசனை கடந்த மே முதலாம் திகதி எமக்கு கிடைத்திருக்க வேண்டும். எனினும், மின்சார சபைக்கு தொடர்ந்து கால அவகாசம் வழங்கப்பட்டது. இறுதி யாக கடந்த மே 27ஆம் திகதியிலிருந்து 2

11

## இந்த ஆண்டு எவருக்கும் சம்பளம் அதிகரிக்காது!

அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூன் 01

சம்பள அதிகரிப்பு கோரி எவர் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இந்த ஆண்டு சம்பளம் அதிகரிக்க முடியாது. ஒரு துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பிறிதொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு - பாதுக்கை புகையிரத நிலையத்தின்

11

## மீசாலை வீரசிங்கம் ம. வி. கணித பிரிவில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் கணித பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் மதியழகன் டினோஜன் யாழ். மாவட்டத்தில் முதலிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இதில், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை சேர்ந்த மாணவனான மதியழகன்

11

## முதியோர் கொடுப்பனவு நிறுத்தப்பட மாட்டாது

கொழும்பு, ஜூன் 01

அஸ்வெசும நலன்புரி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் முதியோர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படுமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

2024 மே மாதம் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான சுமார் 151. 8 கோடி ரூபாய் நிதி மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி

11

## போசாக்கு குறைபாட்டால் கண்டாவளை சிறார் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 01

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 160இற்கும் மேற்பட்ட சிறார்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் 5 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச களப் பயணத்திலேயே

11

## அரசியல் நிகழ்ச்சி நிரலை தவிர்த்து செயல்படுங்கள்!

புலம்பெயர் தமிழரை கோருகிறது இலங்கை

கொழும்பு, ஜூன் 01

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதை தவிர்க்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் குற்றச்சாட்டுகள், நல்லிணக்க முயற்சிகள் குறித்து இதன்போது கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் குடிமக்களின் மனித உரிமைகளை

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஓர் ஆச்சிரமத்தில் துறவி, அவருக்கு ஐந்து சீடர்கள், ஒருநாள் அவர் அணிந்து இருந்த காவி உடை கிழிந்து விட்டது. அதனைத் தைக்க வேண்டி ஐந்து சீடர்களிடமும் காசு கொடுத்து ஊசி வாங்கி வரச்சொன்னார்.

அந்த ஐந்து சீடர்களும் இதுவரை ஊசியை பார்த்தது இல்லை. கடைக்கு சென்றார்கள் ஊசி கேட்டார்கள், அவர்களும் கொடுத்தார்கள். ஆனால், அது ஊசிதான் என்பதை அவர்கள் நம்பவில்லை. நம்மை ஏற்றுகிறார்கள் என்று வேறு கடைக்கு சென்று விட்டார்கள். அங்கும் அதையே கொடுத்தார்கள்.

இறுதியில் "நீங்கள் எல்லாம் எங்களை ஏமாற்ற நினைக்கிறீர்கள்" என்று கூற, அந்தக் கடைக்காரன் இவர்கள் முட்டாள்கள் என்பதைப் புரிந்து கொண்டு, "சீடர்களே உங்களுக்கு என்ன வேண்டும்" என்று கேட்டான்.

நடந்ததைக்கூற, "சரி இதை எப்படி, நீங்கள் ஊசி இல்லை என சொல்கிறீர்கள்?" என்று கடைக்காரன் வினவினான்.

ஐவரும் சொன்னார்கள்: "எங்கள் குரு ஐந்து பேரை அனுப்பி ஓர் ஊசி வாங்கி வரச்சொன்னார். கண்டிப்பாக அது மிகவும் பெரியதாகத்தான் இருக்கும்" எனக்கூற, அவரும் ஒரு பெரிய பனை மரத்தைக் காண்பித்து "இதுதான் ஊசி தூக்கிக் கொண்டு போங்கள்" என்று கூறிவிட்டு அதற்குரிய காசுகளை வாங்கிகொண்டார்.

எந்த விடயத்தை செய்வதானாலும் அதற்குப் பொருத்தமானவர்களை நம்மோடு வைத்திருந்தால் தான் எல்லா விடயங்களுமே நன்றாக நடக்கும் என்பதை சுட்டிக் காட்டவே இந்தக் கதையை எழுதினேன். அதற்காக இனி எழுதப் போகின்ற விடயத்துக்கும் இந்தக் கதைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

கொழும்பில் பல சமூக சேவை அமைப்புகள், அரச சாரா அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், அவை எல்லாமே ஒவ்வொரு தனிநபர்களை மட்டுமே கொண்டு இயங்குவதுபோலவே நமக்குத் தோற்றம் தரும்.

தேசிய சமாதான பேரவை என்றால் கலாநிதி ஜெகான் பெரேரா, மாற்று கொள்கைகளுக்கான நிலையம் என்றால் சரவணமுத்து பாக்கியசோதி, அதுபோல முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியாவின் அமைப்பு, சுரேன் சுரேந்திரனின் உலகத் தமிழர் பேரவை என்று, அதிகம் ஏன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்கத்தில் நமது வேலன் சுவாமிகளும் மட்டக்களப்பின் சீலனும் மாத்திரமே இருப்பது போல - பல அமைப்புகள் இருக்கின்றன.

இதுபற்றி எதற்காக இப்போது என்று நீங்கள் கேட்கலாம்.

அத்தகைய அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தரை அண்மையில் சந்தித்த நமது மக்கள் பிரதிநிதி ஒருவர், தனது மனக்குமுறலை அவரிடம் கொட்டித் தீர்த்திருக்கிறார்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன முடிவெடுப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று மனந்திறந்த அவர், அடுத்து ஏதேனும் சிவில் அமைப்புகளுடன் சேர்ந்து மக்களுக்கு பணியாற்றுவதா அல்லது தெற்கில் உள்ள ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் இணைந்து அரசியல் செய்வதா என்று தான் சிந்தித்துக் கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அவரோடு பேசிய அந்த அரசு சாரா அமைப்பின் (என். ஜி. ஓ.) முக்கியஸ்தர் (அவரைப் பொறுத்தவரை) நமது அந்த மக்கள் பிரதிநிதி மீது நல்ல மரியாதையும் மதிப்பும் வைத்திருப்பவர். இவரால் அவரின் அந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியவில்லையாம். "உங்களைப் போன்றவர்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்தால்தான், தமிழ் அரசியல் தமிழ் இனவாத அரசியலாக மாற்றமடையாது" என்றும் தெற்குடனான நல்லிணக்க அரசியலுக்கு அவர் அவசியமானவர் எனவும் யோசனை சொன்னதோடு அவருக்கு சற்று தெம்பு கொடுத்து அனுப்பியிருக்கிறார்.

இந்த விடயத்தை சொன்ன அந்தப் பிரமுகர், தான் கூறியமை பற்றி இந்த ஊர்க்குருவியின் கருத்துகளை கேட்க விரும்பினார். அதுபற்றிய ஊர்க்குருவியின் கருத்தை இங்கே எழுதுவது சரியாக இருக்காது.

அவர் ஏன்? எதற்காக இப்படி சொன்னார் என்பது ஊர்க்குருவிக்கு புரியவில்லை.

அந்தத் தமிழ் அரசியல் பிரமுகரை சந்திக்கின்ற போதெல்லாம் அவருக்கு ஊர்க்குருவி ஒரு விடயத்தை வலியுறுத்த தவறியதில்லை.

"உங்கள் திறமையும் ஆளுமையும் தமிழ் மக்களுக்கு பயன்பட வேண்டுமானால் நீங்கள் இருக்கின்ற இடத்தைத்தான் மாற்ற வேண்டும். அதாவது நீங்கள் திறமையானவர். ஆனால், இருக்கின்ற இடம்தான் தவறானது" என்பேன்.

அந்த என். ஜி. ஓகாரரிடம் அவர் சொன்ன ஒரு முன்னுதாரணம்தான் எனக்கு அதிகம் ஆச்சரியத்தைத் தந்தது.

அண்மையில் அவருக்கும் அவரின் கட்சியில் ஒருவருக்கும் இடையே சிக்கல் ஏற்பட்டபோது - அந்த முடிவு தெற்கில் ஆச்சரியத்துடன் பார்க்கப்பட்டது. அதுபற்றி அவர் அந்த என். ஜி. ஓ. காரருக்கு சொன்னாராம்.

"நான் ரணில் விக்கிரமசிங்காவைப்போல, அதாவது ஓர் இன்ரலக்ஷுவல் பொலிற்றியன். ஆனால, மக்கள் ஆதரவு, வசீகரம் அவரிடம் (ரணிலிடம்) இருப்பதில்லை. ஆனால் மற்றையவர், மகிந்த ராஜபக்ஷபோல. அவருக்கு மக்கள் ஆதரவும் மக்களைக் கவரும் வசீகரமும் இருக்கிறது..." என்றிருக்கிறார்.

அண்மையில், அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் ஒருவரை சந்தித்த போதும் அவர் இந்த விடயங்களை பகிர்ந்துகொண்டாரென அந்தத் தலைவரின் வட்டாரங்கள் தகவல் சொன்னபோது அதனை நம்ப முடியவில்லை.

அப்படி அவர் சொல்லியிருந்தால், அதன் பின்னணியில் என்ன இருக்கும் என்பதையும் புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஆனால், அதேவிடயங்களை அவர் பலரிடமும் கூறியிருக்கிறாரென அறிகின்றபோது அது குறித்து பேசாமல் நகர்ந்து செல்ல முடியவில்லை.!

**ஊர்க்குருவி.**

## யாழ். பல்கலையின் விலங்கியல் துறையின் சுற்றாடல்சார் விழிப்புணர்வு செயல்திட்டம்!

வடமராட்சி, ஜூன் 01

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் சுற்றாடல் சார் விழிப்புணர்வை ஏற்படுத்த வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன.

விலங்கியல்துறையின் கீழ் இயங்கும் பூச்சியியல் சங்கம் பாடசாலை மாணவர்கள் சுற்றாடலையும் அதன் பல்வகைமையையும் அறிந்து கொள்ளும் பொருட்டு பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளவுள்ளன.

உயிர்பல்வகைமை தொடர்பில் கற்றுக் கொள்வதற்கு உரிய தரத்திலான பரிசோதனை கூடங்களை கொண்டிராத பாடசாலைகள் தரம் 6 முதல் 11 மாணவர்களுக்கு சூழலியல் மற்றும் உயிர்ப் பல்வகைமை தொடர்பான பயிற்சிப் பட்டறையை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வுகூடத்தில் நடத்துதல்.

உயிரியல் ஆய்வு சுற்றுலாவை மேற் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு சுற் றுலா தொடர்பான விளக்கங்களை வழங்கி ஆய்வுகளை சிறப்பாக செய்ய சங்க உறுப்பினர்களின் உதவி வழங்குதல்.

பாடசாலை மகரந்த சேர்க்கையாளர் தோட்டம் அமைக்க விரும்பின் அது தொடர்பான விளக்கங்களை வழங்குதல்.

மேற்படி உதவிகள் தேவைப்படும் பாடசாலைகள் யாழ். பூச்சியியல் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் திருமதி ஆர். ஞானேஸ்வரன் (071 382 0667), யாழ். பூச்சியியல் சங்க செயலாளர் திருமதி எஸ். கோகிலா (077 653 4266) ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-02)

## இலங்கை வருகிறார் மாலைதீவு அமைச்சர்

கொழும்பு, ஜூன்

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஜமீர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இம்மாதம் 03 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை அவர் மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது, மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது தூதுக் குழுவினர், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனும் உத்தியோகபூர்வ இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

(எ)

## இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கல்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் 63ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அற நிதிய சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுகளை கொழும்பு லங்கா மருத்துவமனையின் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர் ஹரிகரன் தன்வந்த் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன.

(ஐ)

## யாழில் செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும், மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயட்ட சமித்தியினுடைய தொழில்நுட்ப உதவியுடன் வடக்கு மாகாணத்தில் இரண்டாவது தடவையாக செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம் ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி சுண்டிக்குளியிலுள்ள திறன் விருத்தி நிலையத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் ஏற்கனவே பயனாளிகள் தெரிவு இடம்பெறவுள்ளது. இருப்பினும் இப் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு தங்கள் விவரங்களை வழங்கத் தவறிய பயனாளிகள் அவர்களது பகுதியிலுள்ள சமூகசேவை உத்தியோகத்தரை உடன் தொடர்பு கொண்டு பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## ஊடகவியலாளர் நடேசனுக்கு வடமராட்சியில் நினைவேந்தல்




வடமராட்சி, ஜூன் 01

படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 20ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு ஊடக இல்லத் தின் தலைவர் கு. மகாலிங்கம் தலைமை தாங்கினார்.

இதன்போது, நடேசனின் திருவுருவப்படத்துக்கு ஈகைச் சுடரை மூத்த ஊடகவியலாளர் சி. தில்லைநாதன் ஏற்றிவைக்க, மலர் மாலையை மகாலிங்கம் அணிவித்தார்.

தொடர்ந்து வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்தவர்கள் மெழுகுதிரி ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 01.06.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல் மாற்றங்கள்

அரசியல் போக்கு எப்போதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. அரசியல் காலத்துக்குக் காலம் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதுண்டு. அவ்வாறான மாற்றங்கள் ஏற்படும்போதுதான் அரசியல் புத்தெழுச்சியடைகின்றது. ஓர் அரசியல் போக்கு தேக்கமடைகின்றது என்றால் - அங்கு மாற்றங்கள் ஏற்படவில்லை அல்லது அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்த வல்ல அரசியல் சக்திகள் தோற்றம் பெறவில்லை என்பதே பொருளாகும். தமிழ்த் தேசிய அரசியல் பல்வேறு கால கட்டங்களை கடந்திருக்கின்றது. இந்தக் காலகட்டத்தில் பல அரசியல் தலைவர்கள் வந்து சென்றிருக்கின்றனர்.

கடந்த 75 வருடகால அரசியல் போக்கில் இரண்டு சர்வதேச தலையீடுகளை தமிழர் அரசியல் சந்தித்திருக்கின்றது. முதலில் இந்திய தலையீடு. இரண்டாவது, மேற்குலகின் தலையீடு. நோர்வே என்பது மேற்குலகின் முகமாகும். இந்தியத் தலையீட்டின்போது, தமிழ்த் தேசிய அரசியல் முற்றிலும் பிராந்திய தன்மை கொண்டதாக மட்டுமே இருந்தது. அன்றைய சூழலில், அரசியலை கையாள்வதும் முன்னோக்கி செல்வதும் இலகுவாக இருந்தது. ஏனென்றால், இந்தியா மட்டுமே ஒரேயொரு வெளித் தரப்பாக இருந்தது. அத்துடன், தமிழ்நாட்டின் ஆதரவும் முழுமையாக இருந்தது. ஆனால், தமிழர் அரசியல் இந்தியாவின் பார்வையிலிருந்து விலகிச் சென்ற பின்னர் நிலைமைகள் சிக்கலடைந்தன. அதிகளவான சர்வதேச தலையீடுகள் குறுக்கிட்டன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மேற்குலகின் தலையீடு நிகழ்ந்தது.

இந்தியாவின் நேரடி தலையீட்டின் தோல்வி விடுதலைப் புலிகளை இந்தியாவுக்குள் செயல்பட முடியாதளவுக்கு மட்டுமே மட்டுப்படுத்தியது. எனினும், தமிழ்நாட்டின் அரசியல் செல்வாக்கு ஏதோவொரு வகையில் விடுதலை போராட்டத்துக்கான அரணாகவே இருந்தது. ஆனால், மேற்குலகின் சமாதான தலையீடு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் முற்றிலும் முடங்க நேர்ந்தது. இறுதியில் மேற்குலகின் சமாதான முன்னெடுப்பின் தோல்வி விடுதலைப் புலிகளின் அழிவில் முடிவுற்றது.

இந்தப் பின்புலத்தில், நோக்கினால் 2009இற்கு பின்னரான அரசியல் அனுபவம் என்பது மிதவாதிகளின் தோல்வி - ஆயுத விடுதலைப் போராட்டத்தின் தோல்வி - ஆகிய இரண்டு தோல்விகளுக்கும் பின்னரான அரசியலாகவே இருந்தது. இந்த அரசியல் போக்கைக் கையாள்வதற்கான வல்லமையை கடந்த 15 வருட கால சம்பந்தன் அணியின் தலைமையால் முடியவில்லை. அவர்கள் படுமோசமான தோல்வியை அடைந்திருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஒரு புதிய அரசியல் பாய்ச்சல் தமிழ் மக்களுக்குத் தேவைப்படுகின்றது. ஒரு வேளை, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றி பெறுமாக இருந்தால் அவ்வாறானதொரு புதிய அரசியல் மாற்றத்துக்கான அடித்தளம் உருவாகுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.

# தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளம் அழிக்கப்பட்டு இன்றுடன் 43 ஆண்டுகள்...!

**யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 43 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இதையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த 'பொதுசன நூலகம்', சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு இன்றோடு 43 ஆண்டுகள் ஆகின்றன.

இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981ஆம் ஜூன் 4 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையின் பல இடங்களிலிருந்து பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் - நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த ஈழநாடு நாளிதழ் பணிமனையும் அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்ற சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது் அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது. ஆம், சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பராகி போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 43 ஆண்டுகள் ஆகின்றன!

1930களில் யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்த கே. எம். செல்லப்பாவின் மனதில் உதித்த எண்ணம்தான் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கான அடிப்படை. தன்னுடைய சொந்த சேகரிப்பிலிருந்த நூல்களையும், பத்திரிகைகளையும் கொண்டு, 1933இல் வாடகை நூலகம் ஒன்றை தன்னுடைய வீட்டிலிருந்தே தொடங்கிய செல்லப்பா, அதை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்ல விரும்பினார்.

அதைத் தொடர்ந்து நகரின் மற்ற முக்கிய பிரமுகர்களின் ஆலோசனையின் பேரில், 1934 ஒகஸ்ட் 1 அன்று யாழ்ப்பாண பொது மருத்துவமனைசாலையில் (இன்றைய யாழ். போதனா மருத்துவமனை) வாடகை அறை ஒன்றில் 844 நூல்கள் மற்றும் 36 பருவ வெளியீடுகளுடன் யாழ்ப்பாண பொதுசன நூலகம் தொடங்கப்பட்டது. ஒருகட்டத்தில் இங்கு இட நெருக்கடி ஏற்படவே, 1936இல் நகர கட்டடம் அமைந்துள்ள ரவுன் ஹோல் அருகே நூலகம் மாற்றப்பட்டது.


தொடங்கப்பட்ட தினத்திலிருந்தே நூலகம் மிக வேகமாக வளரத் தொடங்கியது. பாதிரியார்கள் லோங், டேவிட் உள்ளிட்ட யாழ்ப்பாண சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள், கல்வியாளர்கள் எனப் பல தரப்பினரும் நூலகத்துக்கான நிரந்தமான நவீன கட்டடம் ஒன்றை உருவாக்க முயன்றனர். கட்டடக் கலைஞர் வி. எம். நரசிம்மன் கட் டத்தை வடிவமைத்துக் கொடுக்க, யாழ் நூலகம் சர்வதேச தரத்தை எட்டுவதற்கான ஆலோசனைகளை இந்திய நூலகர் எஸ். ஆர். ரங்கநாதன் வழங்கினார். 1953இல் நூலகத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, திராவிட கட்டட கலையில் அமைந்த புதிய நூலகக் கட்டடம் 1959 ஒக்ரோபர் 11 அன்று திறக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது. அப்போது யாழ்ப்பாணத்தின் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தைத் திறந்துவைத்தார்.

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டு பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிஷங்களை யாழ்ப்பாண நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது.

சுமார் 97 ஆயிரம் அரிய நூல்களுடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவு சமூகத்தால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுப் போற்றப்பட்டது. அதைவிட முக்கியமாக தமிழ் சமூகத்தின் பண்பாட்டு வெளியாக யாழ். பொது நூலகம் விளங்கியது.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்த நூலகத்தைத் தான் சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டு அழித்தனர். யாழ்ப்பாணம் நூலக எரிப்பு என்பது ஒரு தனி சம்பவமல்ல் அது இலங்கைத் தமிழர் பிரச்னையில், தமிழர்களை உளவியல் ரீதியாக அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய ஒரு வரலாற்று நிகழ்வு!

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 01 சனிக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 19
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : தசமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**இடபம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள்.முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.


**மீனம்**
குடும்பத்தினருடன் அனுசரித்துப் போங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் மோதல்கள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

# விவேகானந்தர் பாறையில் தொடர் தியானத்தில் மோடி

நாகர்கோவில், ஜுன் 01

கன்னியாகுமரி பகவதியம்மனை தரிசித்து, விவேகானந்தர் பாறையில் 3 நாள் தியானத்தை பிரதமர் மோடி நேற்று முந்தினம் இரவு தொடங்கி தொடர்ந்து வருகிறார். விவேகானந்தர் பாறையில் காவி உடை அணிந்து அவர் தியானத்தில் ஈடுபட்டுள்ளார். தியான ஒளிப்படங்கள் சமூக வலைதளத்தில் வெளியாகியுள்ளன.

2019 தேர்தல் பிரசாரத்திற்குப் பிறகு பிரதமர் மோடி கேதார்நாத் குகையில் இதே போன்ற தியான பயிற்சியில் ஈடுபட்டார் என்பது நினைவு



கூரத்தக்கது.

இதற்கிடையில், விவேகானந்தா பாறைக்குச் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு திடீர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் விவேகனந்தா பாறைக்குச் செல்லும் சுற்றுலா பயணிகள் கைபேசி, உடைமைகள் ஏதும் எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்கப்படவில்லை.

மோடி இன்று மாலை 4 மணியளவில் தியானத்தை நிறைவு செய்வார். பின்னர் அங்கிருந்து படகு மூலம் கன்னியாகுமர கரைக்கு வந்து அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலமாக திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து விமானம் மூலம் புதுடில்லி செல்கிறார். (ஐ)

# திருமயத்தில் அமித்ஷா கோயில்களில் தரிசனம்

## பக்தர்களுக்கு தடை

புதுக்கோட்டை, ஜுன் 01

புதுக்கோட்டை- திருமயத்தில் பிரசித்தி பெற்ற பெருமாள், சிவன், வைரவர் கோயில்களில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்றுமுன்தினம் குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் கோட்டையில் ராஜராஜேஸ்வரி உடனுறை சத்திய கிரீஸ்வரர், வேணுவனேஸ்வரி உடனுறை உமா மகேஸ்வரர், சத்தியமூர்த்தி பெருமாள் மற்றும் பைரவர் ஆகிய குடைவரைக் கோயில்கள் உள்ளன.

இந்தக் கோயில்களில் தரிசனம் செய்வதற்காக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மனைவி மற்றும் குடும்பத்தினருடன் வாராணசியில் இருந்து விமானம் மூலம் நேற்று மாலை திருச்சி வந்தார்.

அமித் ஷா வருகையையொட்டி கோயில் பிரகாரம் முழுவதும் ரோஜா, தாமரை மலர்களால் அலங்கரிக்கப்பட்டும், சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டும் இருந்தது. பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ஐ)

# அ. தி. மு. க. அணையப் போகிறது அதனால் பிரகாசமாக எரிகிறது

## அண்ணாமலை தெரிவிப்பு

காரைக்குடி, ஜுன் 01

"அ. தி. மு. க. அணையப் போகும் விளக்கு. அதனால் பிரகாசமாக எரிகிறது" என பா. ஜ. கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

காரைக்குடியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "கன்னியாகுமரியில் கடந்த 1892ஆம் ஆண்டு டிசெ.24 முதல் டிசெ.26ஆம் திகதி வரை சுவாமி விவேகானந்தர் கடும் தவம் புரிந்தார். அந்தத் தவம் மூலம் இந்தியாவின் தன்மை, வளர்ச்சியை அவர் உணர்ந்ததாக கூறப்படுகிறது. விவேகானந்தர் மண்டபத்தை தனியார் அமைப்பு நிர்வகித்து வருகிறது. கடந்த காலத்தில் பெரிய போராட்டத்துக்குப் பின்னரே விவேகானந்தர் பாறையில் மண்டபம் கட்டப்பட்டது. தற்போது தனியார் அமைப்பின் அழைப்பின் பேரிலேயே பிரதமர் அங்கு வந்துள்ளார். அதனால்தான் கட்சியினர் யாரும் அங்கு செல்லவில்லை.

மோடி, அமித் ஷா ஆகிய இரு பெரும் தலைவர்களும் தேர்தல் தொடக்கத்திலும், முடிவிலும் தமிழகத்துக்கு வந்துள்ளனர். அதனால் பா. ஜ. க. ஆட்சிக்கு வந்தால் அதில் தமிழகம் பெரும் பங்கு வகிக்கும்.

மக்கள் மன்றத்தில் இந்துத்துவா குறித்து விவாதம் நடப்பது சந்தோஷம்தான். இதன் மூலம் இந்துத்துவா குறித்த உண்மையான விளக்கம் வெளியே வரட்டும். இந்து யாருக்கும் எதிரி கிடையாது. இஸ்லாம், கிறிஸ்துவத்துக்கு எதிரி என்று கூறுபவர்கள் இந்துத்துவவாதியே கிடையாது.

ஜுன் 4-க்கு பின்னர் அ. தி. மு. க. எங்கே இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம். அ. தி. மு. க., பா. ஜ. க. எத்தனை இடங்களில் வெற்றிபெறுகிறது என்பதையும் பார்ப்போம். மேலும், எந்தக் கட்சி மக்கள் மனதை பிடித்திருக்கிறது. எந்தக் கட்சியின் வளர்ச்சி மிக அதிகமாக இருக்கிறது என்பதை பார்ப்பீர்கள். விளக்கு அணையும்போது பிரகாசமாக எரியும் என்பர். அதனால் அவர்கள் கடுமையாக விமர்சனம் செய்கின்றனர்", என்றார். (ஐ)

# பின்வாங்கினார் ஸ்டாலின்

சென்னை, ஜுன் 01

மக்களவை தேர்தல் மற்றும் பிரதமரை தேர்ந்தெடுப்பது குறித்து எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணி இன்று ஆலோசனை கூட்டம் நடத்துகிறது. இதில் தி. மு. க. தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் பங்கேற்க மாட்டார் எனவும் அவருக்கு பதிலாக திமுக எம். பி., டி. ஆர். பாலு பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணி வென்றால் பிரதமராக யாரை தெரிவு செய்வது உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவிருந்தன. முன்னதாக இந்தக் கூட்டத்தில் ஸ்டாலின் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் திடீரென தனது பயணத்தை இரத்து செய்துள்ளார். அவருக்கு பதிலாக டி. ஆர். பாலு பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து உக்ரைனுக்கு வெடிபொருட்களை விற்க முயற்சி

## பாதுகாப்பு அமைச்சு நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 01

**இலங்கையில் மேலதிகமாகவுள்ள வெடிமருந்துகளையும், வெடிபொருட்களையும் உக்ரைனுக்கு விற்பனை செய்வதற்கு போலந்து இடைத்தரகர்களைப் பயன்படுத்துகின்றது என வெளியாகியுள்ள தகவல்களைப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.**



இவ்வாறான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை, ஆதாரங்களும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் நளின் ஹேரத் தெரிவித்தார்.

எனினும் காலாவதியான வெடிமருந்துகள் இராணுவத்தின் முகாம்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும் இந்த வெடிமருந்துகள் பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமானவை இல்லை, தனியாருக்குச் சொந்தமானவை எனத் தெரிவித்துள்ள அவர் பாதுகாப்பு கரிசணைகள் காரணமாக இவற்றை அகற்றுமாறு அந்த நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாக அவற்றை அகற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மேலதிக வெடிபொருட்கள் சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமானவை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ள டெய்லி மிரர், கொஸ்மிக் ரெக்னோலஜிஸ் என்ற தனியார் நிறுவனம் மூலம் சீன நிறுவனம் கடந்த வருடம் இந்த வெடிபொருட்களை போலந்துக்கு அனுப்ப முயன்றது, எனினும் சர்வதேச அழுத்தங்களால் இது நிறுத்தப்பட்டது எனத் தெரிவித்துள்ளது.

# சுற்றுலாப் பயணிகள் இனி வீசா இன்றிச் செல்லலாம்!

கொழும்பு, ஜூன் 31

ஜூன் முதலாம் திகதி முதல் இலங்கையர்கள் வீசா இல்லாமலேயே தாய்லாந்துக்குச் செல்வதற்கும், அங்கு 60 நாட்கள் வரை தங்குவதற்கும் அந்நாட்டு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் இலவச வீசா மற்றும் ஒன் எரைவல் வீசா திட்டங்கள், மாணவர்கள் நீண்ட காலம் தங்குதல் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு கட்டாய சுகாதார காப்பீடு ஆகியவை அடங்கும்.

அதன்படி, அல்பேனியா, கம்போடியா, சீனா, இந்தியா, ஜமைக்கா, கஜகஸ்தான், லாவோஸ், மெக்சிக்கோ, மொராக்கோ, பனாமா, ருமேனியா, இலங்கை மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 36 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுடன், இலங்கை சுற்றுலாப் பயணிகளும் வீசா இன்றி தாய்லாந்துக்குச் செல்ல முடியும்.

இந்த விரிவாக்கம் வீசா இல்லாத நுழைவுக்கான தகுதியுள்ள நாடுகளின் எண்ணிக்கையை 57 இலிருந்து 93 ஆக அதிகரித்துள்ளது. சுற்றுலாவை பெரிதும் நம்பியிருக்கும் தேசிய பொருளாதாரத்தை அதிகரிக்க இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது என தாய்லாந்து அரசாங்க ஊடகவியலாளர் சாய் வச்சரோன்கேயின் தெரிவித்தார். (அ)

# மின்சார சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 6ஆம் திகதி

கொழும்பு, ஜூன் 01

எதிர்வரும் 6ஆம் திகதி, உத்தேச இலங்கை மின்சார சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

உத்தேச மின்சாரத்துறை மறுசீரமைப்புகளை உள்ளடக்கிய இலங்கை மின்சார சட்ட மூலத்தை, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கடந்த மாதம் 25 ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலை இனி பிற்போடமுடியாது

## சொல்கிறார் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 01

ஜனாதிபதித் தேர்தலை இனியும் பிற்போட முடியாது. உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசமைப்பில் ஆணையிட்டுள்ளபடி தேர்தல்கள் நடைபெற வேண்டும். ஆகவே, ஜனாதிபதித் தேர்தலை பிற் போட முடியாது. பிற்போடக் கூடாது.

ஆம், நாங்கள் கடந்த இரண்டு வருடங்களில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளோம். அது தொடர்வது சிறந்த விடயம். ஆனால், அதனைத் தீர்மானிப்பது யார்? மக்களே தீர்மானிக்க வேண்டும்.

நாங்கள் மக்கள் முன்னிலையில் சென்று அவர்களை எங்கள் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ள செய்ய வேண்டும். அவர்கள் நம்பவில்லை என்றால், அவர்கள் யார் வேண்டுமென தீர்மானிக்கலாம் - ஜனநாயகம் என்பது அதுதான்.

ஆகவே, நான் தேர்தல்களை ஒத்திவைப்பது குறித்த அறிக்கையுடன் என்னை தொடர்புபடுத்த விரும்ப வில்லை. தேர்தல்கள் உரிய நேரத்தில் நடைபெற வேண்டும் - என்றார். (எ)

# இலங்கையர் சுற்றுலா வீசாவில் ரஷ்யா செல்வது இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 01

இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு சுற்றுலா வீசா மூலம் செல்வதைத் தற்காலிகமாக இடை நிறுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

இலங்கையர்கள் குறிப்பாக ஆண்கள் ரஷ்யாவுக்கு செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும். உக்ரைன் - ரஷ்ய யுத்தக் களத்தில் பாதிக்கப்பட்டு காயமடைந்துள்ள 37 இலங்கையர்களை முதற்கட்டமாக நாட்டுக்கு அழைத்துவர இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 455 இலங்கையர்களில் 16 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சுற்றுலா வீசா முறைமை ஊடாக ரஷ்யாவுக்கு சென்ற 455 இலங்கையர்கள் துரதிஷ்டவசமாக தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். போலியான வாக்குறுதிகளுக்கு ஏமாற்றமடைந்து இவர்கள் ரஷ்யாவுக்கு சென்றுள்ளனர். இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளார். கொழும்பிலுள்ள ரஷ்ய தூதகரத்துடனும், மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடனும் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரஷ்யாவுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் தொடர்பில் பல பொய்யான செய்திகள் வெளியாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. ரஷ்யாவில் நெருக்கடிக்குள்ளா கியுள்ளவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

அத்துடன் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தியும் பொய்யானது. உதயங்க வீரதுங்க தொடர்பில் எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை- என்றார். (எ)

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் பொதுமக்களைத் திரட்டி சட்ட நடவடிக்கை!

## ஜி. எல். பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 01

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களும் விரும்பினாலும் ஜனாதிபதித் தேர்தலை எவராலும் ஒத்தி வைக்க முடியாது என பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.


தேர்தலை பிற்போட முயற்சித்தால் அதற்கு எதிராக பொது மக்களை திரட்டி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு தெரியாமல் ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது தொடர்பில் ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசிய கட்சி அறிக்கைகளை வெளியிடுவதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டாரவின் கருத்[illegible] எதிராக மக்களின் வாக்[illegible]



மையை பறிக்க எவருக்கும் இடமளிக்காமல் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையின் அரசியலமைப்பின் மூலம் மக்களின் இறைமை நேரடியாகப் பாதுகாக்கப்படுவதால், தேர்தல் அச்சம் காரணமாக அரசாங்கம் பல்வேறு தந்திரோபாயங்களை கையாண்டு வருகின்ற போதிலும் அதனை [illegible] - என்றார்.

# மனைவி மண்வெட்டியால் தாக்கி காயமடைந்த கணவன் உயிரிழப்பு

குருநாகல், ஜூன் 01

மண்வெட்டியால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கணவர் உயிரிழந்த நிலையில் மனைவி கைது செய்யப்பட்டுள்ளதாக இப்பலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பலோகம, கன்திரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

இவர் கடந்த 6 ஆம் திகதி தனது வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் போது சந்தேகநபரான மனைவி இவரை மண்வெட்டியால் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் கெக்கிராவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இவர் கடந்த 24 ஆம் திகதி மீண்டும் கெக்கிராவ மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் மகளின் வீட்டுக்கு சென்ற நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, சந்தேகநபரான 59 வயது மனைவி கைது செய்யப்பட்ட நிலையில் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதங்களில் இருந்து ஒளிந்து ஓடமாட்டோம்!

## கூறுகிறார் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜுன். 01

**சரியான பொருளாதார வேலைத்திட்டமும் சரியான பொருளாதாரக் குழுவும் இல்லாத தரப்பினரே பொருளாதார குழுக்களுக்கு இடையிலான விவாதத்திற்கு அச்சப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் 209ஆவது நிகழ்வு அம்பாந்தோட்டையில் நடைபெற்றது. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்குரோத்தான நாட்டில் நாம் செல்ல வேண்டிய பயணப் பாதை, தொலைநோக்கு மற்றும் வேலைத்திட்டம் குறித்து விவாதமும் நேரிய கலந்துரையாடல்களும் இடம்பெற வேண்டும்.

இதன் மூலம் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை பரிமாறிக்கொள்ள முடியும்.

ஒவ்வொருவருக்கும் நல்ல நல்ல யோசனைகள் இருப்பதால், அந்த யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் விவாதிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு, அதன் மூலம் யோசனைகள் முன்வைக்கப்படவேண்டும்.

பொது மக்கள் கருத்தாடல் நிகழுவதும் மிகவும் முக்கியமான விடயம். பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் குறித்து விவாதம் நடத்துவது அபத்தமானது என்று சிலர் கூறுகின்றனர்.

இரு தரப்பு பொருளாதார குழுக்களுக்குமிடையில் சினேகபூர்வ விவாதத்திற்கு அழைப்பு விடுக்கிறோம்.

அதனையடுத்து, தலைவர்கள் இருவர்களுக்கும் இடையிலான விவாதத்திற்கு நாளை ஒதுக்குமாறும் நான்



கேட்டுக்கொள்கிறேன்.

நான் உட்பட எனது குழுவினர் விவாதங்களில் இருந்து ஒழிந்து ஓட மாட்டோம்.

பொருளாதார தொலைநோக்கோ, வேலைத்திட்டமோ இல்லாதவர்கள் தான் இத்தகைய விவாதங்களில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர்-என்றார். (அ)




# காஸாவில் போர் நிறுத்தம் கோரி கொழும்பில் நேற்று போராட்டம்!

கொழும்பு, ஜுன் 01

காஸா பகுதியில் நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தக் கோரியும் இனப்படுகொலையை உடனடியாக நிறுத்துமாறு கோரியும் நேறறு லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

காசாவில் நடந்த மோதலில் 15,000 குழந்தைகள் மற்றும் 7,500 பெண்கள் உட்பட 36,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதில் இலங்கை பலஸ்தீன ஒற்றுமைக் குழு, சோசலிச இளைஞர் சங்கம் உள்ளிட்ட பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல தடை!

யாழ்ப்பாணம், ஜுன் 01

உரிய வழித்தட அனுமதி இன்றி யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல முடியாது என மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது யாழ் மாவட்டத்தில் அகழப்படும் சுண்ணாம்புக் கற்களை எவ்வித அனுமதியும் இன்றி வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றமை தொடர்பில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு தொடர்பாக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட துறைசார் அதிகாரிகள் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அத்துடன், அனுமதிப்பத்திரம் இன்றி சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவததோடு, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

சட்ட விதிமுறைகளுக்கு அமைய சுண்ணாம்புக்கல் அகழ வேண்டும் எனவும், அதனை உள்ளூர் தேவைக்கே பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக அகழ்வுப் பணியில் ஈடுபடுவோருக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனுமதிப்பத்திர விதிமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றதா என தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளுக்கு இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது.

அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு மண் கொண்டுவருவதை தடை செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்நீதிமன்ற வளாகத்தை புதுப்பிப்பதற்கு சீனா நிதி

கொழும்பு, ஜுன் 01

சீன அரசின் உதவியுடன், உச்ச நீதிமன்ற வளாகத்தைப் புதுப்பிக்கும் பணி தற்போது நடைபெற்றுவருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம், நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென்ஹோங் ஆகியோர் தலைமையில் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 229 மில்லியன் யுவான் செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த ஒப்பந்தத்தில் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க மற்றும் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் ஆலோசகர் டாங் யாண்டி ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சுங்கத் திணைக்களத்திற்கு விரைவில் புதிய அதிகாரிகள்!

கொழும்பு, ஜுன் 01

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகளை இணைத்துக்கொள்வதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுங்கத்துறை உதவி கண்காணிப்பாளர் பதவி வெற்றிடமாகவுள்ளது. சுங்கத்துறை ஆய்வாளர் பதவியும் வெற்றிடமாகவுள்ளது. சுங்கத்துறையின் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக புதியவர்களை நிய



மிக்கவுள்ளோம்.

இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

மேலதிகாரிகளுக்கு அழுத்தங்களை கொடுத்து பதவிகளுக்கு வருவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறு வருவதற்கு இடமளிக்கமுடியாது.

இந்த பதவி நிலைகளுக்கான நேர்காணல்கள் இடம்பெற்று அதற்காக தகுதியுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பங்கள் பதிவு செய்த வரிசைப்படியே முன்னுரிமை வழங்கப்படும். மாறாக மதிப்பெண்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படமாட்டாது.

படித்தவர்களுக்கு இந்த நாட்டில் அதிக வருமானம் தேடும் நிறுவனத்தில் சேர்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெளிப்படையான மற்றும் முன்மாதிரியான ஆட்சேர்ப்பு நடைபெறுவதால் சம்பந்தப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு புறம்பாக செயற்படுவதற்கு அனுமதிக்கமாட்டேன். இதனை பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன்-என்றார். (அ)

# அரசுடன் இணையுமாறு எங்களுக்கு அழைப்பு!

## விமல் வீரவன்ச கூறுகிறார்

கொழும்பு, ஜுன் 01

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்படுவதாகவும், அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் முக்கியமான அமைச்சுப் பதவியைக் கூட பெற்றுக்கொள்ளும் திறமை தனக்கு இருப்பதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சிகளும் தம்மைத் தம்முடன் இணைத்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும், தாங்கள் இணைந்தாலும் உயர் பதவியைப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்



துள்ளார்.

ஆனால், எல்லோரும் ஒரே சித்தாந்தத்தை தான் கடைபிடிக்கிறார்களே தவிர, அரசியல் லாபத்திற்காக தனது சித்தாந்தங்களை மாற்றத் தயாராக இல்லை என்று அவர் கூறினார்.

ஆனால், தற்போது அரசியல் ரீதியாக எவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டாலும், அதேபோன்று தனது சித்தாந்தத்தைப் பேணிக்காக்க தாம் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு எதிராக நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம்

## சமுர்த்தி பயனாளிகள் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 01

**போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் போதைப் பொருளுக்கு எதிரான கவனயீர்ப்பு பேரணியொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.**

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் இப் பேரணி நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு பின்பக்கமாக அமைந்துள்ள நல்லை ஆதீனத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணியானது அங்கிருந்து நல்லூர் பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்த்து.

இதன் போது மகிழ்ச்சியான குடும்பத்திற்கு புகைத்தலே முதல் எதிரி, இளைஞர்களின் ஆண்மையை இல்லாது செய்யும் புகைக்தல் எதற்கு, புகைத்தலை கைவிடு உனது வாழ்வில் மகிழ்ச்சி இரு மடங்காகும், மானிடத்தின் உயிர்கொல்லி மதுவே நீ ஒழிக, அதிகரித்த இளவயது விவாகாரத்திற்கு



காரணம் போதைப்பொருளே, போதைபொருளை கைவிடு வாழ்வு வளமாகும், போதையில்லாத வாழ்வே எப்போதும் மகிழ்ச்சியை தரும் உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பி பேரணியாக சென்றனர்.

இப் பேரணியில் சமுர்த்தி அதிகாரிகள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சங்கிலியனின் 405ஆவது சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி சைவத் தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 405ஆவது சிரார்த்ததின அனுஷ்டிப்பும், நினைவுதினவிழாவும் நேற்று யாழில் இடம்பெற்றது.

இலங்கை சிவனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானத்தம் தலைமையில் யாழ் நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னன் சிலையடியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சங்கிலிய மன்னன் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன் நிகழ்வில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் ஆறுதிருமுருகன், யாழ் மாநகர ஆணையாளர், சமய பெரியோர்கள், வர்த்தகர்கள் ஊர் மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சங்கிலிய மன்னனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து யமுனா ஏரியிலும் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஜமுனைநதி தீர்த்தமும் தெளிக்கப்பட்டது. (அ)

# இன்றும் சம்பளப் பேச்சுவார்த்தைக்கு செல்லாத பெருந்தோட்ட நிறுவனங்கள்

கொழும்பு, ஜூன் 01

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பாக நேற்று நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.

இதனால் சம்பளப் பிரச்னை தொடர்பில் நேற்றும் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ள முடியாமற்போனது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான நேற்றைய பேச்சுவார்த்தை நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் அமைச்சில் நடைபெறவிருந்தது.

தொழில் ஆணையாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தைக்காக வருகை தந்திருந்த போதிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் எவரும் இதன்போது சமூகமளித்திருக்கவில்லை. (அ)

# லஞ்சம் வாங்கிய பொலிஸ்காரரின் சிவில் உரிமைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 01

11 வருடங்களுக்கு முன்னர் லுணுகம்வெஹர பொலிஸில் கடமையாற்றிய போது பத்தாயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதாக ஒப்புக்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா நான்கு வருட கடுங்காவல் தண்டனையும் ஐந்து வருட பணி இடைநிறுத்தமும் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும், இலஞ்சம் கேட்ட இரண்டு குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொண்ட குற்றம்சாட்டப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி, அந்த அபராதத் தொகையைச் செலுத்தாவிட்டால் ஆறு மாத சிறைத்தண்டனையும் விதித்தார்.

மேலும், இலஞ்ச ஒழிப்புச் சட்டம் பிரிவு 29ன் கீழ் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு வாக்களிப்பது உட்பட சிவில் உரிமைகளை இடைநிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க, வழக்கின் முடிவை உடனடியாக தேர்தல் ஆணையருக்கு அனுப்பவும் நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் மற்றைய பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் தற்போது உயிரிழந்துள்ளதாக நீதிமன்றில் தெரியவந்துள்ளது.

# படுகொலை செய்யப்பட்டுள்ள 35 தமிழ் ஊடகவியலாளர்கள்!

## சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 01

இலங்கைத்தீவில் போர்க்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என மட்டு. ஊடக அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் அதன் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகள் இது வரை கைது செய்யப்படவில்லை.

இலங்கையில் இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப் பட்டுள்ளனர்.

இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்களும் 05 சிங்கள ஊடகவியலாளர்களும் 03 முஸ்லிம் ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தன அவர்களின் ஆட்சிக்காலத்தில் 01 ஊடகவியலாளரும் ரணசிங்க பிரேமதாச அவர்களின் ஆட்சிக்காலத்தில் 02 ஊடகவியலாளரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் 13 ஊடகவியலாளர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலைசெய்யப் பட்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் 2010ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கொண்டே இருந்தது.

இந்நிலையில், இலங்கையில் நடைபெற்றுவந்த படுகொலை ஆட்சியை ஊடகத்துறையின் பெரும்பங்குடன் முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை அரசாங்கம் இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்த போதும் அதன் குற்றவாளிகள் கூட கைது செய்யப்படவில்லை.

அத்தோடு இந்த நாட்டில் பெருந்தொகையாக படுகொலை கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணைகளை இன்றுவரை ஆரம்பிக்கவில்லை.

இந்நிலையில் மட்டக்களப்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளரும் மனிதவுரிமை செயற்பாட்டாளருமான ஐயாத்துரை நடேசன் அவர்களின் 20ஆவது ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் மேற்படி கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

1. இலங்கையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகவியலாளர்க ளின் படுகொலைகளுக்கு சர்வ தேச விசாரணை நடாத்தப்பட்ட வேண்டும்.

2. இலங்கையில் இன்றுவரை சுட்டுக்கொல்லப்பட்ட காணாமல்போன ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிடவேண்டும்.

3. இலங்கையில் தொடரும் மறைமுகமான ஊடக அடக்கு முறையை தடுத்து நிறுத்தி ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

4. மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை விசாரணையை மீள ஆரம்பிக்கவேண்டும்.

உள்ளிட்ட எமது கோரிக்கைகளை சர்வதேச தேச அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமன் என்ற அடிப்படையில் 20 வருடங்களுக்கு பின்னரும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்." என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை, புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

## மட்டக்களப்பில் மரதன் ஓட்டம் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஜூன் 01

**"நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது.**




ஆரோக்கியமான வாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்கில் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

"நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவோம்" என்னும் தலைப்பில் இம்முறை சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்புத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சும் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், மண்முனை வடக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு மரதன் ஓட்டம் நேற்றுக்காலை 8 மணியளவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன்போது, இளைஞர்கள் மத்தியில் புகைத்தல் மற்றும் மது பாவனையை ஒழிப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் மரதன் ஓட்டப்போட்டியில் பங்குகொண்டவர்களுக்கு "போதையிலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்போம்" என்னும் ஸ்ரிக்கர்கள் மாவட்ட அரசாங்க அதிபரால் ஒட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஈஸ்பரனின் ஒழுங்கமைப்பில் மரதன் ஒட்ட நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபரினால் கொடியசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மரதன் ஓட்டப்போட்டியானது இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்வாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)



# விளையாட்டுக் கழகத்தின் கலாசார விளையாட்டு விழா

கோட்டைக்கல்லாறு, ஜூன் 01

மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு பிறண்சிப் விளையாட்டுக் கழகத்தின் கலாசார விளையாட்டு விழா கோட்டைக்கல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் அக்கழகத்தின் தலைவர் வில்வராஜா தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பூ. பிரசாந்தன்,

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளிதரன், உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (எ)

# உக்கிரமடைந்துள்ள கடல் அரிப்புக்கு தீர்வு



கல்முனை, ஜூன் 01

கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளதால் அதனைத் தடுப்பதற்கு கடந்த வாரம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். ஹரீஸ், நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடமும் அந்த அமைச்சின் செயலாளரும், கரையோரப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் ரணவக்க ஆகியோரை சந்தித்து, உடனடியாகத் தடுப்பு அணைகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் முதற்கட்டமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# உயிர்ப்பல்வகைமை தினம்: சாய்ந்தமருதில் மர நடுகை



சாய்ந்தமருது, ஜூன் 01

சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினத்தையொட்டி இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது தொழிற் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள், தொழிற் பயிற்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# முஸ்லிம் மகா வித்தியாலயம் புதிய சாதனை

புத்தளம், ஜூன் 01

2024 ஆம் ஆண்டுக்கான கல்பிட்டி கோட்டமட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் புத்தளம் - கல்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் புதிய சாதனை படைத்துள்ளது.



இந்த ஆண்டுக்கான கல்பிட்டி கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியானது ஆசிரிய ஆலோசகர் எஸ். ஐ. எம். பளீல் தலைமையில் நடைபெற்றது.

இதில் 16, 18, 20 வயது பிரிவு மாணவர்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கல்பிட்டி கோட்டமட்டத்தின் பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் மூன்று பிரிவுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன் மகுடத்தை சூடிக்கொண்டது. (எ)

# பத்து பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கையளிப்பு

கல்முனை, ஜூன் 01

பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை நோக்கமாகக்கொண்டு தூர இடங்களிலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்காக சர்வதேச நிறுவனமான கட்டார் சாரிட்டி நிதியுதவியுடன் அதன் அம்பாறை மாவட்ட பங்காளர் நிறுவனமான கப்சோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களில் முதல் கட்டமாக சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு 10 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி

# ட்ரம்ப் குற்றவாளி

## நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பு



நியூயோர்க், ஜூன்

**அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த 2016 ஆம் ஆண்டு தேர்தல் நிதியை முறைகேடாக கையாண்ட வழக்கில் குற்றவாளி என நியூயோர்க் நீதிமன்ற 12 ஜூரிகள் அடங்கிய குழு அறிவித்துள்ளது. சுமார் இரண்டு நாட்கள் நடந்த தீவிர ஆலோசனைக்குப் பிறகு நியூயோர்க் ஜூரிகள் தீர்ப்பை அறிவித்தனர்.**

77 வயதான ட்ரம்ப், கடந்த 2017 முதல் 2021 வரையில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்தார். ட்ரம்ப் அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக அறியப்பட்டார். குடியரசுக் கட்சி சார்பில் தற்போது மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் கண்டுள்ளார். இந்த நிலையில்தான் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நீதிபதி ஜூவான் மெர்ச்சன், வரும் ஜூலை 11 ஆம் திகதி தண்டனை விவரங்களை அறிவிக்கவுள்ளார்.

குற்ற வழக்கில் அமெரிக்க ஜனாதிபதியோ அல்லது முன்னாள் ஜனாதிபதியோ விசாரிக்கப்படுவது மற்றும் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்படுவது அமெரிக்க அரசியல் வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.

**என்ன வழக்கு?**

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஆபாச நடிகை ஸ்டோமி டேனியல்ஸ்க்கு சுமார் 1. 3 இலட்சம் டொலர்களை 2016 ஆம் ஆண்டுக்கான தேர்தல் பிரசார நிதியிலிருந்து கொடுத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது.

இதையடுத்து இந்தக் குற்றச்சாட்டை மறைக்கும் விதமாக 11 காசோலை மற்றும் 12 வவுச்சர் உள்ளிட்ட ஆவணங்களைப் போலியாக ட்ரம்ப் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. அந்த ஆவணங்கள் போலி என்பதைத் தான் தற்போது ஜூரிகள் கண்டறிந்துள்ளனர். இதையடுத்து ட்ரம்ப் குற்றவாளி என்றும் அறிவித்தனர். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி முறைகேட்டு வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்படுவது இதுவே முதன் முறை.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிடுகின்றனர். இந்த நிலையில், இந்த வழக்கு விவகாரம் ட்ரம்புக்கு பின்னடைவாக அமைந்துள்ளது. இருந்தாலும் ட்ரம்ப் தேர்தலில் போட்டியிட தடை ஏதும் இருக்காது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

**ட்ரம்ப் கருத்து**

"இது எனக்கு அவமானம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை. இதை மேற்கொண்ட நீதிபதி ஊழல்வாதி. நமது தேசமே இந்த மாதிரியான மோசடியை இப்போது எதிர்கொண்டு வருகிறது. எதிர்க்கட்சியினரை பழிக்கும் வகையில் பைடன் நிர்வாகம் இதை செய்து வருகிறது. நமது அரசியல் சாசனத்துக்காக நாம் போராட வேண்டியுள்ளது" என ட்ரம்ப் மிகவும் ஆக்ரோஷமாக தெரிவித்தார்.

ஜனாதிபதி பைடன் தரப்பு: "யாரும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் இல்லை" என ஜனாதிபதி ஜோ பைடனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். தனது ஆட்சி காலத்தில் பல்வேறு சர்ச்சைகளுக்கு ட்ரம்ப் ஆளாகியிருந்தார். அதன் பின்பு அவரை அந்த சர்ச்சைகள் சூழ்ந்துள்ளன.

**தேர்தலில் போட்டியிட முடியுமா?**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு குறைந்தபட்ச தகுதிகளையே அமெரிக்க அரசமைப்பு வரையறுத்துள்ளது. போட்டியிடுபவர் அமெரிக்கப் பிரஜையாகவும் குறைந்தபட்சம் 35 வயதுடையவராகவும் 14 ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்தவராகவும் இருக்க வேண்டும். குற்றப் பின்னணி உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க எந்தச் சட்டமும் இல்லை. சிறையிலுள்ள நபர்களும் தேர்தலில் போட்டியிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# காஸா மீதான போர் 7 மாதங்கள் நீடிக்கும்

## இஸ்ரேல் அறிவிப்பு

காஸா, ஜூன் 01

காஸா மீதான போர் இன்னும் ஏழு மாதங்களுக்கு நீடிக்கும் (இந்த ஆண்டு இறுதி வரை) என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் காஸா மீதான இஸ்ரேலின் போரில் 36 ஆயிரத்து 224 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.


ஒக்டோபர் 7, 2023 ஆம் ஆண்டு இஸ்ரேல் - காஸா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் தங்களது இன்னுயிரை துறந்து வருகின்றனர். ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது.

மே 26 ஞாயிற்றுக்கிழமை தெற்கு காஸாவிலுள்ள ரபா நகரத்தில் தற்காலிக முகாம்கள் மீது இஸ்ரேல் படைகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறுகையில், "நாங்கள் இப்போது 2024 இன் ஐந்தாவது மாதத்தின் இறுதி நாளில் இருக்கின்றோம். ஹமாஸ் அமைப்பையும், அதன் அரசாங்கத்தையும் அழிக்க எங்களுக்கு இன்னும் 7 மாத கால அவகாசம் தேவைப்படும். இதனால் போர் குறைந்தது இன்னும் ஏழு மாதங்கள் நீடிக்கும்.

எகிப்து எல்லையில் பெரும் பகுதியை இஸ்ரேல் இராணுவம் கட்டுப்படுத்துவதுடன் ஹமாஸின் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் வகையில் அனைத்தையும் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் காஸாவில் போர் இந்த ஆண்டு முழுவதும் தொடரும்"- என்றார்.

காஸா மீதான இஸ்ரேலின் போரில் 36 ஆயிரத்து 224 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும், 81 ஆயிரத்து 777 பேர் காயமடைந்தனர். ஹமாஸின் தாக்குதலில் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆகவுள்ளது. இவ்வாறு நாளுக்கு நாள் பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. (எ)



# பள்ளத்துக்குள் பாய்ந்தது பஸ் 21 பேர் பலி! 40 பேர் படுகாயம்

ஜம்மு, ஜூன் 01

பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஜம்மு மாவட்டத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 21 பேர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விபத்து ஜம்மு மாவட்டத்தின் சோகி சோரா பெல்ட்டிலுள்ள டாங்லி மோர் என்ற இடத்தில் நிகழ்ந்தது. 150 அடிக்கு கீழே பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்ததாக அதிகாரிகள் கூறினர்.

"ஹரியாணாவின் குருஷேத்ரா பகுதியிலிருந்து ஜம்மு காஷ்மீர் மாநிலம் ரியாசி மாவட்டத்திலுள்ள ஷிவ் கோரி பகுதிக்குப் பக்தர்களை ஏற்றிக்கொண்டு இந்த பேருந்து சென்றுள்ளது. விபத்தை அடுத்து, பொலிஸ் மற்றும் பாதுகாப்புத்துறை மற்றும் உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விபத்தில் காயமடைந்தவர்கள் அக்னூர் மருத்துவமனை மற்றும் ஜம்முவிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள 40 பயணிகளில் 6 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# "இந்தியா" கூட்டணி அரசு அமையப் போகின்றது

## ராகுல் காந்தி நம்பிக்கை

டில்லி, ஜூன் 01

இந்தியா கூட்டணி அரசு அமையப் போகின்றது என்பதை காங்கிரஸின் சிங்கம் போன்ற துணிச்சல் கொண்ட தொண்டர்களுக்கு நான் நம்பிக்கையுடன் கூற விரும்புகிறேன்- இவ்வாறு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியா முழுவதும் இறுதி மற்றும் 7 ஆம் கட்டமாக 57 தொகுதிகளில் இன்று நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்றுடன் ஓய்ந்தது.

இந்த நிலையில், காங்கிரஸ் தொண்டர்களுக்கு ராகுல் காந்தி வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது வருமாறு,

"பிரசாரத்தின் கடைசி நாளான இன்று நாட்டின் மகத்தான மனிதர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நேரத்தில், இந்தியா கூட்டணி அரசு அமையப் போகிறது என்பதை காங்கிரஸின் சிங்கம் போன்ற துணிச்சல் கொண்ட தொண்டர்களுக்கு



நான் நம்பிக்கையுடன் கூற விரும்புகிறேன்.

நாட்டின் அரசியலமைப்பு மற்றும் கல்வி நிறுவனங்களை காக்க தலைவணங்காமல் நின்ற கூட்டணியின் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவருக்கும் நான் இதயபூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதமர் தொடர்ந்து திசைதிருப்ப பல்வேறு முயற்சி செய்தாலும், பொதுமக்களின் உண்மையான பிரச்சினைகளில் நாம் போராடி வெற்றி பெற்றோம். மேலும் விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தோம்.

சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரின் வாழ்க்கையையும் மாற்றும் புரட்சிகரமான உத்தரவாதங்களை நாம் ஒன்றிணைந்து முன்வைத்தோம், மேலும் நமது செய்தியை நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கொண்டு சேர்த்தோம்.

கடைசி தருணம் வரை வாக்கு எண்ணும் மையங்களை கண்காணிக்குமாறு நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இந்தியா வெற்றிபெறப் போகிறது" இவ்வாறு ராகுல் காந்தி அந்த வீடியோவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மாற்றமே அரசின் பிரதான இலக்கு

## கூறுகிறார் செஹான் சேமசிங்க



**கொழும்பு, ஜூன் 01**

**நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளவேண்டும் என நினைப்பவர்களே பொருளாதார மாற்றச் சட்டமூலத்தை எதிர்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் நம்பிக்கையான இலக்கைக் கொண்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகள் அரசியல் நோக் கத்தை மாத்திரம் கருத்தில் கொண்டுள்ளன.

பொருளாதார மாற்ற சட்டமூலத்தின் ஊடாக உற்பத்தித் திறனை அதிகரித்து ஒவ்வொரு பிரஜைக்கும் சம வாய்ப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைக்கொண்ட நாட்டை உருவாக்கவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு இணைந்த வகையில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன், புத்தாக்கத்துடன் கூடிய ஏற்றுமதி விரிவாக்கப்பட்ட போட்டிச் சந்தையை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்த சட்டமூலம் பற்றி அறியாதவர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள வேண்டிய தேவை உள்ள தரப்பினர்களால் மாத்திரமே பொருளாதார மாற்ற சட்டமூலத்தை எதிர்க்க முடியும்.

எமது நாட்டில் இலக்குமயப்பட்ட சட்டக் கட்டமைப்பு நடைமுறைப்ப டுத்தப்படாமையே, பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

அதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தின்படி, ஏற்கனவே உள்ள சட்டத்திற்கு உட்பட்ட இலக்குமயப்பட்ட வேலைத் திட்டத்திற்கு தேவையான மறுசீரமைப்புகள் மற்றும் வேலைத் திட்டங்களை செயல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

நாம் அவற்றை தயக்கமின்றி நிறைவேற்றுவோம் -என்றார்.

# அடிப்படை உரிமையை மீறியுள்ளனர் பொலிஸார்

## உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 01

இலங்கை பொலிஸார் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

ராஜகிரிய பகுதியில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியை கண்டுபிடிக்கும் நோக்கில், அவரது மனைவி, குழந்தை மற்றும் அவரது தாய் ஆகியோரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் முறையற்ற விதத்தில் பல மணிநேரம் தடுத்து வைத்துள்ளதாக உயர்நீதிமன்றம் நேற்று கூறியுள்ளது.

இதன்படி, அடிப்படை உரிமையை மீறியதற்காக பொறுப்பை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் அப்போதைய பதில் பணிப்பாளர் நெவில் சில்வா மற்றும் பிரதம பொலிஸ் பரிசோதகர் மெத்தானந்த ஆகியோர் தமது சொந்த நிதியிலிருந்து 2,50,000 ரூபாவை பாதிக்கப்பட்ட தரப்பிற்கு வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு 10,000 ரூபாவை வழங்க வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரஷ்யா-உக்ரைன் போர் விவகாரம்: இலங்கை குழு ரஷ்யாவுக்கு விஜயம்!

கொழும்பு, ஜூன். 01

ரஷ்ய - உக்ரைன் போரில் ஈடுபட்ட முன்னாள் இலங்கை இராணுவ வீரர்கள் குறித்து விவாதிக்க இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த மாதம் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஜூன் 5 - 7 ஆம் திகதிகளுக்கு இடையில் நாட்டின் பிரதிநிதிகள் குழு ரஷ்யாவுக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை கிடைத்த தகவல்களின்படி 16 இலங்கையர்கள் காணாமல் போயுள்ளதாகவும், 26 இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடலுக்கு செல்லவேண்டாம்!

கொழும்பு, ஜூன் 01

மறு அறிவித்தல் வரும் வரையில் கடற்பரப்புகளில் பயணிக்க வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு பருவமழையின் தீவிரம் காரணமாக நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனவே மறு அறிவித்தல் வரை மன்னாரிலிருந்து காலி ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடற்றொழில் மேற்கொள்ள வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு அறிவித்துள்ளது.

மேலும் நாட்டில் தற்போது காணப்படும் மழை மற்றும் காற்றின் நிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடமத்திய, மேல், தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# தமக்கு தேவையான வாகனங்களை கொண்டுவர அமைச்சர்கள் முயற்சி

## வாகன இறக்குமதியாளர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 01

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படுவதைக் காரணம் காட்டி தமக்குத் தேவையான வாகனங்களை கொண்டுவர அமைச்சர்கள் தயாராகின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அதன் தலைவர் பிரசாத் மானகே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாகன இறக்குமதித் துறையில் நிலவும் பிரச்னைகள் காரணமாக இதுவரை 50 வீதம் முதல் 60 வீத மக்கள் தொழிலை கைவிட்டனர்.

வாகனங்கள் இறக்குமதி தொடர்பாக 4 வருடங்களாக காத்திருக்கிறோம் என்றும் விரைவில் கொண்டு வருவோம் என்கிறார்கள். ஆனால் இது வரை ஏற்றுமதி செய்யப்படவில்லை. நாங்கள் வாகனங்களை இறக்குமதி செய்யும்போது, அரசாங்கம் 200 வீத வரி விதிக்கிறது.

நாங்கள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் கலந்துரையாடினோம். முதலில் பஸ், லொறி போன்ற வாகனங்கள் அனுமதிக்கப்படும் என்றும், பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதத்தைப் பார்த்துவிட்டு அதனை செய்வோம்.

மேலும் இதனைக் காரணம் காட்டி அமைச்சர்களுக்குத் தேவையான வாகனங்களைக் கொண்டுவர ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏனெனில் அண்மையில் அமைச்சர்கள் சபாநாயகரிடம் வாகனங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்-என்றார்.

(அ)

# பாதாள உலக குழுவின் மிதிகம ருவான் கைது!

கொழும்பு, ஜூன் 01

பாதாள உலக தலைவரும் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபருமான மிதிகம ருவான் நேற்று டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளார்.

அதன்படி அழைத்து வரப்பட்ட மிதிகம ருவன் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல் உறுப்பினர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர், டுபாயில் உள்ள இரவு விடுதியில் நடந்த சண்டை தொடர்பாக சர்வதேச பொலிஸாரின் ஊடாக சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மிதிகம ருவன் என்பவரை டுபாய் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவரை அழைத்து வருவதற்காக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று டுபாய் சென்றிருந்தது.

அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் மேற்பார்வையில் இது இடம்பெற்றுள்ளது.

மேலும் ஹரக் கட்டாவின் பல குற்றங்களை துடாவிடம் இருந்து இயக்கியவர் ஹரக் கட்டாவின் நெருங்கிய உறவினரான மிதிகம ருவன் என்பதும் தெரிய வந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து ஹரக் கட்டா தப்பிச் செல்லும் நடவடிக்கையையும் மிதிகம ருவன் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மின்சாரக் கட்டணம் குறையும்

கொழும்பு, ஜூன். 01

“மின்சாரக் கட்டணத்தை 10 தொடக்கம் 20 சதவீதம் வரை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக” இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த வருடத்தின் 2ஆவது மின் கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணையை தயாரித்துள்ளோம்.

எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதி மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் அதனை கையளிக்கவுள்ளோம். நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலம், மற்றும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தேவையான அனுமதிகள் எமக்கு கிடைத்துள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ப செயற்படக் கூடாது. ஆனால் மின்சார சபையின் தற்போதைய நிர்வாகம் அவ்வாறு செயற்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு...

ஏற்படுத்த வேண்டும்.

திருக்கோணேச்சர ஆலய திருப்பணிக்கு தொல்லியல் திணைக்களம் பல்வேறு இடையூறுகளை செய்து வந்துள்ளது. இந்த இடையூறுகளை நிறுத்தி திருக்கோணேச்சரத்தில் பெருந் திருப்பணிகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு செய்து உதவுங்கள்.

திருக்கோணேச்சர புனித தீர்த்தமான பாபநாசம் தீர்த்தக்கரையை புனருத்தாரணம் செய்து பொதுமக்கள் அந்த இடத்தில் தமது கடமைகளை செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

திருக்கேதீச்சர ஆலயத்தை இந்திய அரசு கருங்கல் கோயிலாக புனர்நிர்மாணம் செய்ததுபோல் திருக்கோணேச்சரத்தையும் அழகாக நிர்மாணிப்பதற்கு இந்திய அரசிடம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டது. அவர்கள் அக்கறையாக இருப்பதாக தகவல்கள் திரட்டினார்கள். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் ஆளுநர் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## எதிராளிகள்...

தினம் இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன்போது, கடந்த வழக்குகளில் எதிராளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தமது தரப்பு அவதானங்களை வழக்காளியின் சட்டத்தரணி எடுத்துரைத்தார். அத்துடன், ஏழு பிரதான எதிராளிகளும் மூன்று வெவ்வேறு விதமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அவற்றுக்கு இடையே இணக்கமான ஒரு நிலைப்பாட்டை கண்டு - சுமுகமாக விடயத்தை தீர்ப்பது சாத்தியமற்றது என்று வழக்காளி தரப்பு சட்டத்தரணி.

எதிராளிகள் தரப்பில் தமக்காகத் தாமே நேரில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், இது விடயத்தில் கட்சி ரீதியாக எதிராளிகள் அனைவரும் இப்போது ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் ஒரே நிலைப்பாட்டை பதில் மனுக்களாக அவர்கள் சமர்ப்பிப்பார்கள். அந்த சமர்ப்பணத்தின் அடிப்படையில் இணக்கமான முடிவு ஒன்றுக்கு வழக்காளியும் எதிராளிகளும் வர முடியும் - என்றார்.

இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதுடன், பதில் மனுக்களை தாக்கல் செய்வதற்கு ஜூலை 19ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி வழக்கை அதே திகதிக்கு ஒத்திவைத்தது.

நேற்றைய வழக்கில் கிளிநொச்சியை சேர்ந்த தமிழ் அரசு கட்சியின் உறுப்பினரான சண்முகராஜா ஜீவராஜா என்பவர் தன்னை இடையீட்டு எதிராளியாக சேர்ப்பதற்கு எதிர்ப்பின்றி அனுமதியளிக்கப்பட்டது.

**பின்னணி**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை பதவிக்கு கடந்த ஜனவரி 21ஆம் திகதி தேர்தல் நடந்தது. இதைத் தொடர்ந்து ஜனவரி 28ஆம் திகதி செயலாளர் பதவிக்கும் தேர்தல் நடந்ததுடன் கட்சி நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாடு நடைபெறவிருந்த நிலையில், அந்த மாநாட்டுக்கு தடை கோரி வழக்கு தொடரப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றிலும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டன. இதையடுத்து, அந்த வழக்குகளில் கட்சியின் மாநாட்டை நடத்த இரு நீதிமன்றங்களும் தடை விதித்திருந்தன.

இந்த வழக்குகளில் மாவை சேனாதிராஜா, சி.சிறீதரன் எம்.ஏ.சுமந்திரன், குகதாசன், குலநாயகம், யோகேஸ்வரன் ஆகியோர் எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மீசாலை...

டினோஜன் மூன்று பாடங்களிலும் 'ஏ' தேர்ச்சி பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, இரண்டாம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவரும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் பத்மலிங்கம் ஆதித்தியன் ஆகியோரும் பெற்றனர். (ஐ)

## போசாக்கு...

இந்த விடயம் தெரியவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்தப் பிரத்தை சேர்ந்த மக்கள் வறுமை, தொழில் வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இவையே போசாக்கு குறைபாட்டுக்கு பிரதான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்தப் பிரதேசத்தில் கடந்த 5 மாதங்களில் மட்டும் 6 இள வயது கர்ப்பங்களும் அடையாளம் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மின்சார...

வார கால அவகாசம் வழங்கப்பட் டது என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், மின்சார சபையின் யோசனை கிடைத்த பின்னர் - பொது மக்களின் ஆலோசனைக்கு பின்னர் மின்சாரக் கட்டணத்தை குறைக்க முடியும் என்று அவர் கூறினார்.

இதேநேரம், இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மின்சார கட்டணத்தை 10 முதல் 20 வீதம் வரை குறைக்க முடியும் என்று தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்த...

அபிவிருத்தி பணிகளை நேற்று பார்வையிட்ட பின்னர் ஊட கங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி ஆசிரி யர் - அதிபர் சங்கத்தினர் வியாழக்கிழமை (நேற்று முன் தினம்) முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு இன்னும் வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை என்பதை இவர்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு பேச்சில் உள்ள நிலையில் சகல அபிவிருத்தி பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு வெற்றி பெற்றால் மாத்திரமே அபிவிருத்தி பணிகளை தொடர முடியும். அரச செலவினங்களை முகாமைத்தும் செய்வதற்கு கூட அரச வருமானம் போதுமானதாக அமையவில்லை.

சம்பள அதிகரிப்பு கோரி எவர் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இந்த ஆண்டு எவருக்கும் சம்பளத்தை அதிகரிக்க முடியாது. 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பிறிதொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் செயல்பாடு என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில், எவர் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதைய மறுசீரமைப்புகளை தொடர வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போதைய மறுசீரமைப்புகளை மாற்றியமைத்தால் ஒரு வாரம்கூட நாட்டை நிர்வகிக்க முடியாது - என்றார். (ஐ)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக சங்கானையிலும் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "அழகான இளைஞர்களின் உடல் அழகையும் முகத்தின் வசீகரத்தையும் சிதைக்கும் போதைப்பொருள் பாவனைக்கு ஏமாற மாட்டோம்", "எமது பிள்ளைகளை புகையிலை நிறுவனங்களிடம் இருந்து பாதுகாக்க அனைவரும் அணிதிரள்வோம்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் வடக்கு பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், சங்கானை பிரதேச செயலக பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூன்று மாணவிகள் மாயம்!

கொழும்பு, ஜூன் 01

கம்பஹா யக்கல பிரதேசத்தில் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்காக சென்ற 14 வயதுடைய மூன்று மாணவிகள் நேற்று முதல் காணாமல் போயுள்ளதாக யக்கல மற்றும் வீரகுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன மூன்று மாணவர்களும் கம்பஹா யக்கல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9ஆம் ஆண்டில் கல்வி கற்கும் நண்பர்கள் மூவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் கடந்த புதன் கிழமை இரவு வரை வீட்டுக்கு வரவில்லை என தெரிவித்து பெற்றோர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

காணாமற்போன மூன்று மாணவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என யக்கல மற்றும் வீரகுல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணம் - தென்மராட்சி வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை 02 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் விஷேட பூஜையைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது. மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி கிராம வலமாக குளப்பிள்ளையார் கோவிலில் எழுந்தருள்வார். குளப்பிள்ளையார் கோவில் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர், பிரசங்க சக்கரவர்த்தி சி. கா. கமலநாதன் தலைமையுரையை அடுத்து சொற்பொழிவை சைவப்புலவர் பிரசங்க சக்கரவர்த்தி செ. கந்த. சத்தியதாசன் "சங்காபிஷேக மகிமை" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (எ)

## யாழ்.இந்துவில்...

அடங்குவர்.

**பருத்தித்துறை ஹாட்லி**

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் 21 மாணவர்கள் 3ஏ சித்தியை பெற்றனர். இதில், பௌதிக விஞ்ஞான (கணிதம்) பிரிவில் 13 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 4 மாணவர்களும் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் ஒரு மாணவனும், உயிரியல் தொழில்நுட்பத்தில் 2 மாணவர்களும் வணிகவியலில் ஒரு மாணவனும் அடங்குவர்.

**பருத்தித்துறை மெதடிஸ்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் 9 மாணவிகள் 3ஏ சித்தி பெற்றனர். இதில், பௌதிக விஞ்ஞான (கணிதம்) பிரிவில் 3 மாணவிகளும் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 3 மாணவிகளும் கலைப் பிரிவில் 3 மாணவிகளும் உள்ளடங்குவர்.

**உடுப்பிட்டி அமெரிக்க மிசன்**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கணிதப் பிரிவில் ரி. தர்சயன், எஸ். யதுர்சனன், எஸ். சிவசங்கர், ஜே. கோகுலன், உயிரியல் பிரிவில் கயலோன், கலைப்பிரிவில் எஸ். சுஸ்மிதா ஆகிய 6 பேர் 3ஏ சித்தி பெற்றனர்.

**யாழ். மத்திய கல்லூரி**

யாழ். மத்திய கல்லூரியில் முதல்கட்டமாக கிடைத்த தகவலின் அடிப்படையில் 3 பேர் 3ஏ சித்தி பெற்றனர். இதில், பௌதிக விஞ்ஞான (கணிதம்) பிரிவில் 2 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞான பிரிவில் ஒரு மாணவரும் அடங்குவர்.

இதேநேரம், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் 30 மாணவியர் 3ஏ பெறுபேற்றை பெற்றுக் கொண்டனர். (ஐ)

## அரசியல்...

மேம்படுத்துவதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார்.

தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று 6,700 பேரின் வேதனை மிகுந்த குற்றச்சாட்டுகளை ஏற்பதாகவும் நல்லிணக்கத்துக்கு ஏற்ற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## முதியோர்...

வைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப காரணங்களால் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும் ஜூன் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேச செயலகங்களில் வழமையான முறையில் முதியவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் நலன்புரி நன்மைகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

அதேபோன்று ஜூன் மாதக் கொடுப்பனவும் குறித்த மாதத்திலேயே வழங்கப்படும். அஸ்வெசும கொடுப்பனவு கட்டமைப்பின் கீழ் உரிய வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே தற்போது அஸ்வெசும நலன்புரி தொகையைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களிலிருந்தும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அற்ப அரசியலால்தான் நாடு வீழ்ச்சியடைந்தது

## சஜித் பிரேமதாஸ சாடல்



அம்பாந்தோட்டை, ஜூன் 1

**தற்போது மதுபான உரிமப் பத்திரம் பெற அரசியல் கட்சிகளைத் தேடி அலையும் தரப்பினரும் நாட்டில் உள்ளனர். இத்தகைய அற்ப அரசியலால் தான் இந்நாடு இந்தளவு வீழ்ச்சியடைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக சாடியுள்ளார்.**

பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களின் அனைத்து கொடுக் கல் வாங்கல்களும், நன்கொடைகளும் பூரண வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் சகல அரச கொடுக்கல் வாங்கல்களும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தாலும் சரி, ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, பிரதமராக இருந்தாலும் சரி, திருட்டு, இலஞ்சம், ஊழல், மோசடி ஆகியவற்றுக்கு இடமில்லை. அவர்கள் சுகபோக வாழ்க்கையாக பொழுதைக் கழிப்பதை விட மிகவும் கடின முயற்சியில் ஈடுபட்டு மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிவரும்.

சில சமயங்களில் தாராள சலுகைகள், வரப்பிரசாதங்கள், பதவிகள், பொருளாதார நலன்கள் கிடைக்காதபோது பல்வேறு நபர்கள் பல்வேறு முடிவுகளை எடுக்கலாம். அது எமக்குப் பொருட்டல்ல. தற்போது மதுபான உரிமப் பத்திரம் பெற அரசியல் கட்சிகளைத் தேடி அலையும் தரப்பினரும் கூட உள்ளனர். அவர்கள் தங்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம் குறித்து சிந்திக்காமல் அற்ப அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அற்ப அரசியலால் தான் இந்நாடு இந்தளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போதைய நிலையில் இருந்து விடுபட அனைவரும் கைகோர்த்து பெரும் அபிவிருத்திப் புரட்சிக்கு தங்களது அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பை நல்க முன்வர வேண்டும். அரசியல்வாதிகளின் பின்னால் சென்று அலையாமல், மக்கள் சொந்தக் காலில் நின்று, தன்னம்பிக்கையுடன் அபிமானத்துடன் வாழச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். - என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 211 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அம்பாந்தோட்டை முல்கிரிகல, வலஸ்முல்ல, மெதகம் கொட மகா வித்தியாலத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மாணவர்களை இலக்கு வைத்து கேரளக் கஞ்சா விற்றவர் கைது!

வெல்லம்பிட்டிய, ஜூன் 01

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கேரளக் கஞ்சா விற்பனை செய்த நபர் ஒருவர் வெல்லம்பிட்டிய கித்தம்பஹுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.


பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் .

இவர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் சந்தேக நபரிடமிருந்து 29 கிராம் 210 மில்லி கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் நீண்டகாலமாகப் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கேரளக் கஞ்சாவை விற்பனை செய்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்தனர். (எ)

# திருமண ஆடை அலங்காரத்துடன் ஆசிரியர் நியமனம் பெற்ற பெண்



அம்பாந்தோட்டை, ஜூன் 01

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வின் போது இடம்பெற்ற சம்பவம் ஒன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நேற்று முன்தினம் திருமண பந்தத்துக்குத் தயாரான யுவதி ஒருவர், தனது திருமண ஆடை அலங்காரத்துடன் ஆசிரிய நியமனத்தை பெற்றுக்கொள்வதற்காக நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்.

இவ்வாறு வருகை தந்தவர் அம்பலாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த திலினி என்ற யுவதி ஆவார்.

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தங்கத்தை இறக்குமதி செய்த நிறுவனங்களுக்கு அபராதம்!

கொழும்பு, ஜூன்

இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்களுக்கு 1,243 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.


தொடர்புடைய நிறுவனமொன்றுக்கு 179 மில்லியன் ரூபாயை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். இனிமேல், தங்கப் பொருட்களை இறக்குமதி செய்யும் அனைத்து உரிமம் பெற்ற நிறுவனங்களும் இந்த சட்டவிரோத செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர், மூன்றாம் தரப்பினரால் நேரடியாக இறக்குமதி செய்யாமல் வாங்கும் தங்கத்துக்கான உற்பத்தி அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் அபராதங்கள் வசூலிக்கும் - என்றார்.

அரச வருமான இழப்பு தொடர்பான ஓட்டைகளை மூடி, படிப்படியாக நாட்டின் அரச வருமானத்தை ஸ்திரப்படுத்தும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். தங்கப் பொருட்களை இறக்குமதி செய்யும் குறிப்பிட்ட சில தரப்பினர் இதைப் பெரிய மோசடியாக மாற்றிவிட்டதால் இதைச் சுற்றி ஒரு மாபியா உள்ளது.

இது குறித்து அரசின் கவனத்துக்கு வந்த முதல் கட்டத்தில் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பல்வேறு மட்டங்களில் இருந்ததாகவும் இந்தச் சவால்கள் அனைத்திலும் சளைக்காமல் அரசாங்கம் இரண்டாம் கட்டத்தை நோக்கி நகர்வதாகவும் அமைச்சர் கூறினார்.

சட்டவிரோதமாக தங்கம் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலின் பேரில், தங்கம் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகளை விதித்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.(எ)

# மருத்துவருக்கு எதிராக ஊழியர் உண்ணாவிரதப் போராட்டம்!



கொழும்பு, ஜூன் 01

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் ருக்க்ஷான் பெல்லானவுக்கு எதிராக மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த ஊழியர் தேசிய மருத்துவமனையின் பண்டாரநாயக்கா கட்டடத்தின் மேல் மாடியில் ஏறி நின்று இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடடுள்ளார். (எ)

# பெருந்தொகை சிகரெட்டுடன் இந்தியப் பிரஜை சிக்கினார்

கொழும்பு, ஜூன் 01

சட்டவிரோதமான முறையில் சிகரெட்களை இலங்கைக்குள் கொண்டு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின், கட்டுநாயக்கா பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதான இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.அவர் சட்டவிரோதமாக கொண்டு வந்த சிகரெட்களின் பெறுமதி சுமார் 3 இலட்சம் ரூபாய் எனத் தெரியவந்துள்ளது. (எ)

# நாளாந்தம் பத்து இலட்சம் முட்டை நுகர்வு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 01

நாட்டில் நாளாந்தம் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது, கடந்த சில மாதங்களில் முட்டையின் நாளாந்த நுகர்வு 70 இலட்சமாகவும், பின்னர் 80 இலட்சத்தையும் கடந்துள்ளது. இதன்படி, நாளாந்தம் முட்டையின் நாளாந்த நுகர்வு 10 இலட்சத்தால் அதிகரித்துள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு மற்றும் அதிக சத்தான மற்றும் மலிவாகக் கிடைக்கக்கூடிய உணவுகளான இறைச்சி மற்றும் மீன் விலைகள் அதிகரித்ததே முட்டை நுகர்வு அதிகரிப்புக்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் கப்ரால் உட்பட ஐவரும் விடுதலை

கொழும்பு, ஜூன் 01

2012 ஆம் ஆண்டு கிரேக்கப் பத்திரங்களில் முதலீடு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 1.84 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உட்பட 5 பிரதிவாதிகளையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன்கொண்டு செல்ல முடியாது எனப் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தனர்.

முதற்கட்ட ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட நீதிபதி, பிரதிவாதிகளை விடுதலை செய்து உத்தரவிட்டார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org